மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# நற்றிணையில் இடம்பெறும் பாலைச் செய்திகள்

**முனைவர் ச.கௌசல்யா**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
தேசியக் கல்லூரி (தன்னாட்சி),
திருச்சி

**முன்னுரை**

தொல்காப்பியர் பொருளிலக்கணத்தில் முதற்பொருளாக நிலத்தையும், காலத்தையும் குறிப்பிடுகின்றார். நிலத்தைப் பிரித்துக் கூறும் வகையில் நான்கு வகையாகக் கூறியுள்ளார். இளங்கோவடிகளோ சிலப்பதிகாரத்தில், "முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து" என்று பாலைத் திணைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். வளமை உடையோர் செல்வங்களைக் கொள்ளையிட்டும் விளைநிலங்களைக் கொள்ளை கொண்டும் வாழ்ந்ததால் "வன்மை மறவர்" என்று அழைக்கப்பட்டனர். பாலை நிலத்தை "வீரத்தின் விளைநிலம்" என்றும் கூறுவர். இவர்களின் குலதெய்வமாகக் "கொற்றவை" என்னும் மாதெய்வம் விளங்கினாள். கொற்றவைக்குப் பலியிட்டுப் போற்றி வழிபடும் பாங்கினை இளங்கோவடிகள் வேட்டுவ வரியில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் பாலையை "நடுவுநிலைத்திணை" என்றும் குறிப்பிடுகின்றார்.

பாலையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். பொதுவாக அவலச் சுவையே கற்போரின் உள்ளத்தை நெகிழ்விப்பதாக உள்ளது. பிரிவாலே கொள்ளும் ஏக்கமும், துயர நினைவுகளும்

முறையாக இலக்கியப்படும்போது, கற்போரின் நெஞ்சங்களிலே உருக்க உணர்வை விளைவிக்கின்றது. எனவே பாலைத்திணை பற்றிய செய்யுள்கள் உணர்ச்சி எழுச்சியூட்டும் தன்மை மிகுந்து விளங்குவதைக் காணலாம். இத்தகு பாலைத்திணை பற்றிய செய்திகள் நற்றிணையில் எங்ஙனம் காணப்படுகின்றன என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

**பாலைநில வழியின் தன்மை**

நீலமணி போன்று வீழும் அருவியையும், பொன்போன்று வேங்கை மலர்கள் உதிர்ந்து இருப்பதுமாகிய மலைப் பகுதியையும் உடையது பாலை. அங்கே மூங்கில் மரங்கள் நிறைந்து காணப்படுகின்ற மேட்டு நிலத்தில் சிறுகுடிகள் அமைந்துள்ளன. கற்கள் நிறைந்த குழிகளில் இருக்கும் கலங்கிய நீரையும், குறைந்த உணவையும், மழையையே காணாத அம்மக்கள் உண்ணுகின்றனர்.

ஒன்றோடொன்று சிக்குண்ட சிறுதூறுகளும், பழைய தோற்றமும், அகன்ற இடத்தையும் உடையது தலைவன் செல்லும் பாலைவழி. அவ்வழியில் பசியால் வாடிய பசுவின் மணியோசை காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கும். வெள்ளைத் துணியை விரித்தது போல வெப்பம் நிறந்த வெயில் வீசும் கோடைக்காலமாக அது விளங்குகிறது.

"ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலச்சி
ஆர்ந்த ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு
அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி ஆகும்" (பா:43,(3-5))

பாணர்கள் கொன்றை மரத்தின் இனிக்கும் கனிகளைப் பார்த்து, அவை பறையினை அடிக்கப் பயன்படும் குறுந்தடி போல் இருக்கிறதே என மயக்கம் கொண்டனர். வெம்மையாகக் காற்று வீசுவதாலும், மூங்கில்கள் அடர்ந்திருப்பதாலும் செல்வோர்க்குத் துன்பம் தரக்கூடியதாய்த் திகழ்கிறது அவ்வழி.

"புல்லிதழ் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் நியைத் தோன்றி
புறவுஅணி கொண்ட பூநாறு கடத்திடை" (பா:48,(3-5))

என்ற பெருங்கடுங்கோ பாடலில் பாலையானது, கோங்கம்பூ மலர்ந்து காடெல்லாம் மணம் வீசும், கரடுமுரடான வழி என்று கூறப்பட்டுள்ளது. வளைந்த கொம்பினையுடைய காட்டுப்பசு, சிங்கம், குரங்கு முதலிய விலங்குகள் வாழும் காட்டுப்பகுதி. ஆங்கே,

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரும் நாற்றம் வளிகலந்து ஈய" (பா:56,(1-2))

குரா மரத்தின் அரும்புகள் மலர்ந்துள்ளன. மேலும் பன்றியை வேட்டையாடி, அதன் தசையை வேடன் கொடுக்க அதனைச் சமைப்பாள் மனைவி. அச்சிறுகுடி இருக்கும் காட்டு வழியில் புலியும், யானையும் நடமாடும், இருள்மிகுந்துக் காணப்படும், கண்டார்க்கு அச்சம் தரும் வழியாகவும் உள்ளது. மேலும் வேல்படைபோல் மலர்ந்த சோலையையுடைய பகன்றை மலர்கள் வெள்ளி வட்டிலைப்போல மலர்ந்திருக்கும்.

"வேனில் ஓதிப் பாடுநட வழலை
வரிமரல் நுகும்பின் வாடி அவண" (பா:92,(2-3))

வேனில் காலத்துக் கொடுமையால் துணையோடிருக்கும் ஓந்தி வருந்திய நடையைப் பெற்றது. அது கருவழலைப் பாம்பைப் போலத் தோன்றும் வரிகளையுடைய மரற்கள்ளியின் இளமடலைப் போல் வாட்டமுற்று இருந்தது. முட்கள் பொருந்திய அடியை உடைய இலவமரத்தில் காய்ந்த கொடிகள் சுற்றியுள்ளன. பெருங்காற்று வீசியதால் கிளைகள் முறிகின்றன. அவ்வழி நீரும் நிழலும் அற்ற கடத்தற்கரிய வழியாகும்.

"பிடிபிளந் திட்ட நார்இல் வெண்கோட்டுக்
கொடிறுபோல் காய வால்இணர்ப் பாலை" (பா:107,(2-3))

வெட்பாலை மரம், நாரில்லாத வெண்கிளைகளையும் குறடு போன்ற காய்களையும், பூங்கொத்துக்களையும் உடையது. அம்மரங்கள் நிறைந்த சுரத்தில் புலி இயங்கும். தொழிலில் வல்ல ஓவியர் ஒள்ளிய அரக்கினையூட்டிய முதுகோலின் தலையைப் போன்றதான பஞ்சினை உடையது பாதிரிமலர். அம்மலர்களைத் தெருக்களில் விற்பர். ஈச்ச மரங்கள் நிறைந்த களர் நிலத்தில் கடிய நடையை உடைய களிறு, வழியில் செல்வோரைக் கொல்லப் பாலை நிலத்தில் அலையும். யாரும் இல்லாததால் சினம்கொண்டு பனை மரத்தில் மோதி சினம் தணிக்கும் பாழ்நிலம்.

"வேனில் இற்றித் தோயா நெடுவீழ்
வழிநாள் ஊசலின் கோடை தூக்குதொறும்
துஞ்சுபிடி வருடும் அத்தம்" (பா:162,(9-11))

இத்தி மரத்தின் இலை வேற்படை போல் இருக்கும். வைகறைப் பொழுதில் நிலத்தில் படாத இத்தி மரத்தின் நீண்ட விழுதுமேல் காற்று வீசும்போதெல்லாம் ஊசலாடுதல் போல ஆடும். ஆடும் அவ்விழுது தரையில் தூங்கும் பிடியானைமீது உரசும். இத்தகைய வழி பாலைவழியாகும்.

நடமாட்டம் இல்லாத பாலை வழியில் ஈச்சமரத்தின் குலைகள்மீது அமர்ந்த ஆண்பறவை தன் பெண்பறவையைக் கூவி அழைக்கிறது. அவ்வொலியைக் கேட்ட புலி உறுமுகிறது. ஆங்கே கோடைக்காற்றும் வீசுகிறது.

"கணிச்சியிற் குழித்த கூவல் நண்ணி
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை இனநிரை வெளவும்
கானந் திண்ணிய மலைபொன் றிசினே" (பா:240,(7-10))

வெயிலால் வெப்பமுற்ற பரல்கள் மிகுந்த பள்ளம். அதற்குப் பக்கத்தில் குந்தாலியால் தோண்டப்பட்ட கிணறு. பசுக்களைக் காக்கும் ஆயர்கள் கிணற்றருகே சிறுகுழி பறித்து நீர் நிரப்பினர். அந்நீரைக் குடிக்க யானைகள் வரிசையாகச் செல்லும். அத்தகைய காடு திண்ணிய மலைபோல அழியாமல் நின்று அச்சம் தருவதாய் இருக்கும்.

தேன் கிடைக்கும் மலைப்பக்கத்தில் தூய மணல்கரை உள்ளது. அக்கரையில் அசைகிற கிளைகளையுடைய மாமரச் சோலை உள்ளது. மரக்கிளைகளில் சுவையாக வடுக்கள் உள்ளன. கரிய குயில்கள் அங்கே தங்குகின்றன. ஓமைமரம் பட்டுப்போன கிளைகளை உடையது. அக்கிளைகளில் சிள்வீடு எனும் ஒரு வண்டு மறைந்து ஒலித்துக் கொண்டிருக்கும். வேற்று நாட்டிற்குச் செல்லக் கூடிய வழியும் அதுவாகும்.

"ஊசல் ஒண்குழை உடைவியத் தன்ன
அத்தக் குமிழி ஆயிதழ் அலரி
கல்லென வரிக்கும புல்லென் குன்றம்" (பா:286,(1-3))

குமிழ மரங்கள் மலையில் உள்ளன. அம்மரத்தின் அழகிய இதழை உடைய மலர் அசைந்தாடும் பெண்கள் அணிந்திருக்கும் குண்டலம் போலத் தோன்றும். காற்று வீசும்போது கல்லெனும் ஒலியோடு குமிழ மலர்கள் உதிர்ந்து கோலம் செய்யும். மக்கள் கடக்க முடியாத அரிய சுரவழியில் யானைகள் கால்களால் உதைத்து விளையாடுவதால் புழுதி எழும். அப்புழுதி மக்கள் செல்லும் பழைய வழியை மறைத்துத் துன்பத்தைத் தரும். அவ்வழியில் வயிரம் ஏறிய கருவேல மங்கள் நெருங்கியிருக்கும். குளிர்ந்த புதரில் உள்ள இண்டங்கொடியின் குழை சிறகு குவிந்து வருத்தத்துடன் இருந்த வெள்ளைக் கொக்கின் முதுகைத் தடவுகிறது. கள்ளிச் செடியின் தெறிக்கின்ற காய்கள் நொடித்துவிட்டாற்போல ஒலி எழுப்பக் கூடியவை. அக்கள்ளியின் கிளைகளில் ஆண்புறா ஒன்று இருக்கும். அப்புறா பெண்புறாவை அழைக்கும். வெயிலின் வெப்பம் நிறைந்தது அச்சுரவழி.

"அரவாழ் புற்றம் ஒழிய ஒய்யென
முரவாய் வள்ளுகிர் இடப்ப வாங்கும்" (பா:325,(4-5))

ஆண்கரடி இரைதேடும் வேட்கையில் இரவில் சென்றது. நீடிய செயலை அடய கறையான்கள் அழியும்படி கரடி பெரும் நகங்களால் புற்றைப் பறித்தது. நினைத்தற்கரிய பாலை வழியில் செல்லுதல் அரிது. சுரத்தில் கொன்று போடப்பட்ட மக்களின் பிணங்கள் நிறைந்துள்ளன. அழுகிய தீநாற்றம் வீசுவதால் பருந்து, கொத்தித் தின்ன முடியாமலும், முட்டை இட்ட சோர்வாலும் வெறுத்துக் கடந்து போனது. சிறகுகளை அடித்துக் கொண்டதால் இறகுகள் உதிர்ந்துபோயின. வெப்பம் மிகுந்து மூங்கில் வாடியுள்ள அம்மலையின் சிறிய வழியில் பருக்கைக் கற்கள் நிறைந்த பள்ளத்தில் குறைவாக நீர் ஊறியிருந்தது. யானையைத் தாக்கிய புலி, பள்ளத்தில் உள்ள நீரைக் குடித்தது.

"உகுபலி அருந்திய தொகுவிற் காக்கை
புன்கண் அந்திக் கிளைவயின் செறியப்
படையோடு வந்த பையுள் மாலை" (பா:343,(5-7))

மலையிடத்திலுள்ள சிறிய நெறியில் முல்லைக் கொடி படர்ந்துள்ளது. அவ்வூர்த் தெருக்களில் மலரின் தாது உதிர்ந்து எருவாகக் கிடக்கிறது. தெருவில் செல்லும் பசுக்களின் முதுகை ஆலம் விழுதுகள் தீண்டுகின்றன. அம்மரத்தின் அருகே கடவுளுக்குச் செய்த பலிச்சோறு கிடக்கின்றது. காக்கைகள் அப்பலிச் சோற்றைத் தின்றன. அவை துன்பம்தரும் மாலைப்பொழுதில் தம் சுற்றத்தோடு சேர்ந்தன. மறவர்கள்

வழிப்போக்கர்களையும், புதிதாக வருபவர்களையும் கொன்றனர். கொல்லப்பட்ட பிணங்களைத் தின்ன வந்த கழுகை நரி விரட்டியது. கொழுத்த ஊனைத் தின்ற நரிக்குத் தாகமெடுத்தது; நீர் கிடைக்காமையால் அலைந்து திரிந்து வருந்தியது. கற்குவியல் நிழலில் வெயிலுக்கு ஒதுங்க நினைத்து இடம் இல்லாமையால் வருந்தியது. அவ்வாறான அஞ்சத் தக்க வழிகள் கடத்தற்கு அரியவை.

## தொகுப்புரை

நற்றிணையின் பாலைத்திணையில் பல்வேறு வகையான மரங்கள், செடி, கொடி, பூக்கள், பழங்கள், விலங்குகள், பறவைகள், பலவகையான வழிகள் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

- பாலைத்திணை பாடல்களின் வாயிலாக விளா, பலா, மூங்கில், கொன்றை, குரா, இலவம், வெட்பாலை, ஈச்சமரம், பனை, இத்தி, குமிழமரம், கருவேலம் முதலிய மரங்கள் அறியப்படுகின்றன.
- விளாம்பழங்கள், கொன்றை மரத்தின் கனிகள், வெட்பாலையின் காய்கள் முதலிய காய்களும் கனிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- கோங்கம்பூ, பகன்றை மலர், குரா மர அரும்புகள், வெட்பாலைப்பூ, குமிழ மலர்கள், முல்லை மலர்கள், முல்லைக் கொடி, இண்டங்கொடி ஆகிய மலர்களும், கொடிகளும் சுட்டப்பட்டுள்ளன.
- காட்டுப்பசு, சிங்கம், குரங்கு, புலி, யானை, ஓந்தி, நரி, பன்றி, கரடி, பருந்து, குயில், கொக்கு, புறா, பாம்பு, கரையான்கள், காக்கை, கழுகு போன்ற விலங்குகளையும், பறவைகளையும் எடுத்துக்காட்டுவதாய் பாலைத்திணை திகழ்கிறது.

மொத்தத்தில் பாலைத்திணையானது, கரடுமுரடான கற்கள், கற்குவியல்கள் நிரம்பியதாகவும், பிணங்கள் குவிந்து கிடப்பதும், வெப்பம் மிகுந்ததுமாய், நீரில்லாமல் உயிரினங்கள் துன்பப்படும் கடுமையோடு காணப்படுகின்றது. மேலும் பாலை வழி என்றாலே நினைப்போர்க்கும், அவ்வழி செல்வோர்க்கும், அச்சம் தருவதாகவும், ஆபத்துகள் நிறைந்ததாகவும், பாதுகாப்பற்றதாகவும் இருப்பதால் உயிருக்கு உத்தரவாதமின்மை கருதி, தலைவன் பிரிந்து செல்லும் பாலைவழியை நினைத்துத் தலைவி வருந்துவதாக நற்றிணையில் பாலைப்பாடல்கள் அமைந்துள்ளன.